**செய்தி வெளியீடு எண். 116** **நாள். 04.02.2010**

**செய்திக் குறிப்பு**

# தமிழகத்தில் போலியோ நோய் ஒழிப்புத் திட்டம்.

## இரண்டாம் சுற்று பல்ஸ் போலியோ சிறப்பு முகாம் 7–2–2010, ஞாயிறு.

இரண்டாம் சுற்று பல்ஸ் போலியோ சிறப்பு முகாம் 7–2–2010 ஞாயிறு அன்று நடைபெறுகிறது. முதலாம் சுற்று முகாமில் ஐந்து வயதிற்குட்பட்ட சுமார் 70 லட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர். இது தவிர வெளி மாநிலங்களிலிருந்து வந்து கட்டுமானம் மற்றும் சாலை அமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஏழை எளிய தொழிலாளர்கள் மற்றும் இலங்கை அகதிகளின் குடும்பங்களைச் சார்ந்த சுமார் 30,000 குழந்தைகளுக்கும் சொட்டுமருந்து கொடுக்கப்பட்டது.

முதல் சுற்று முகாமின்போது சொட்டு மருந்து கொடுக்கப்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் 7–2–2010 ஞாயிறன்று மீண்டும் சொட்டு மருந்து கொடுக்க தமிழக அரசு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

### முதல் சுற்று முகாமின் அனுபவங்கள்:-

பொது மக்கள் மிகப் பெரிய அளவில் பங்கேற்று முதல் சுற்று முகாமை வெற்றி பெறச்செய்தனர். இதற்கு அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஈடுபாடும், பத்திரிகை, வானொலி மற்றும் அனைத்து தொலைக் காட்சிகளின் ஒத்துழைப்பும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

### கூடுதல் சொட்டு மருந்தின் அவசியம்:-

தமிழ்நாட்டில் கடந்த 6 ஆண்டுகளாக எந்தக்குழந்தையும் போலியோவினால் பாதிக்கப்படவில்லை. ஆனாலும் பீகார், உத்திர பிரதேசம் போன்ற வட மாநிலங்களில் போலியோ நோய்த் தொற்று இருந்து வருவதால், தமிழ்நாட்டுக்குள் போலியோ கிருமிகள் பரவ வாய்ப்புள்ளது. வருமுன் தடுக்கும் நடவடிக்கையாக தமிழ்நாட்டில் எல்லா குழந்தைகளுக்கும் கூடுதலாக போலியோ சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம் போலியோ நோய் ஊடுருவதை தடுத்துவிட முடியும். முக்கியமாக ஒரு குழந்தைகூட விடுபடாமல் அனைத்து 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து கொடுக்கப்படவேண்டும்.

### முக்கிய அம்சங்கள்.

1. போலியோ சொட்டு மருந்து மிகவும் பாதுகாப்பானது. எத்தனை முறை வேண்டுமானாலும் கொடுக்கலாம். உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்றது.

2. ஓரிரு நாட்களுக்கு முன்பு சொட்டுமருந்து கொடுக்கப்பட்டிருந்தாலும் முகாம் நாட்களில் மீண்டும் கொடுக்கவேண்டும்.

3. முகாம் நாட்களில் கொடுக்கப்படும் சொட்டு மருந்து வழக்கமான தவணைகளில் கொடுக்கப்படும் சொட்டு மருந்திற்கு மாற்று அல்ல. இது ஒரு கூடுதல் தவணையாகும்.

4. புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கும் முகாம் நாட்களில் சொட்டு மருந்து கொடுப்பது அவசியமாகும்.

சென்ற முறையை போலவே இந்த சுற்றிலும், தமிழ்நாட்டில் சுமார் 40,399 சிறப்பு மையங்கள் மூலம் சொட்டு மருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம்மையங்கள் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிக் கூடங்கள் மற்றும் முக்கியமான பொது இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பேருந்து நிலையம், ரயில் நிலையம் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகிய இடங்களில் நடமாடும் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு முகாம் நாட்களில் பயணம் மேற்கொள்ளும் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தனியார் மருத்துவர்களும், முகாம் நாட்களில் தங்களிடம் வரும் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சுமார் 70 லட்சம் குழந்தைகள் போலியோ முகாம் மூலம் பயன் பெறுவார்கள். இப்பணியைச் சிறப்பாகச் செய்ய பல்வேறு அரசுத் துறைகள், ரோட்டரிச் சங்கம் மற்றும் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் சேர்ந்த 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இந்த முகாமில் ஈடுபடுவார்கள். சொட்டு மருந்து கொடுக்கப்பட்டதற்கான அடையாளம் தெரிந்து கொள்வதற்காக, குழந்தையின் இடது கை சுண்டு விரலில் அடையாள ”மை’’ வைக்கப்படுகிறது.

ஒவ்வொரு வீட்டையும் பார்வையிட்டு அந்த வீட்டில் உள்ள குழந்தைக்கு சொட்டு மருந்து தந்துள்ளதை "P" என்ற குறியீடு செய்து உறுதி செய்யப்படும்.

தமிழ்நாட்டில் இதுவரை நடத்தப்பட்ட பல்ஸ் போலியோ முகாம்கள் நல்ல வெற்றியைத் தந்துள்ளன. அதுபோல எதிர் வரும் 7–2–2010 ஆம் தேதி நடைபெறும் போலியோ சிறப்பு முகாமை முனைப்புடன் செயல்படுத்துவது அவசியமாகிறது. ஒரு குழந்தை கூட விடுபடாமல் சொட்டு மருந்து கொடுக்கப்படுவதன் மூலம் போலியோ நோயை முற்றிலுமாக நாட்டிலிருந்து ஒழிக்கமுடியும்.

இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, பொதுமக்கள் அனைவரும் 5 வயதிற்குட்பட்ட தங்கள் குழந்தைகளை போலியோ முகாமிற்கு அழைத்துச் சென்று, சொட்டு மருந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

*****

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–